# திராவிட மாடல் அரசு 21

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







# முதலீடுகளின் முதல் முகவரி!

*‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதுதான் திராவிட மாடல் அரசின் தாரக மந்திரம். அந்தக் குறளின் பின்பாதி, ‘செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்’ என்கிறது.*

*எந்த ஒரு துறையிலும் பிரகாசிக்க வேண்டுமென்றால், திறமை வேண்டும். தொழில் துறையில் திறமையோடு, தொடர்ந்த முதலீடும் ஊக்குவிப்பும் வேண்டும். அதை உணர்ந்த நம் ‘திராவிட மாடல் அரசு’, 2022-2023 நிதியாண்டில், தொழில் துறையை, ‘தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை’ என்று பெயர் மாற்றம் செய்தது.*

*பெயர் மாற்றத்தால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறது என்று பலர் நினைக்கலாம். அந்த மாற்றத்தின் முழுப்பொருளையும் தெரிந்து கொண்டால், நம் அரசு தொழில் துறையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு நகர்வின் வீச்சும் புரியும்.*

*2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டினை ‘ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர்’ பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று நம் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள், ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய இலக்கை நிர்ணயித்துள்ளார்கள். உற்பத்தி மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டின் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்க முடியும்.*

*தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், இங்குள்ள பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்தித் துறை மிகப்பெரிய பங்காற்றுகிறது. அதன் மூலம் விரைவான வளர்ச்சியை அடைவதற்கு, வணிகச் சீர்திருத்தங்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்வது, அதிக அளவில் தொழிற்சாலைகளை அமைப்பது, தொழிற்சாலைகளுக்குத் தேவையான உள்ளீடுகளை நியாயமான விலைகளில் வழங்குவது, தொழிற்சாலைகளுக்குத் தேவையான மனிதவளத்தை எதிர்காலத் தேவைக்கு ஏற்ப தயார் செய்வது எனப் பல முனைகளில் இந்த அரசு பணியாற்றி வருவதைப் பிரதிபலிக்கவே அந்தப் பெயர் மாற்றம்!*

## வளர்ச்சியை உறுதிசெய்யும் முதலீடுகள்!

*நாட்டிலேயே, 38,837 தொழிற்சாலைகளுடன், அதிக தொழில்மயமான மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதிக அளவில் பெண் தொழிலாளர்கள் உள்ள மாநிலமும் இதுதான். மேலும், தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதியாளராகவும் திகழ்கிறது. **‘இந்தியாவின் மின் வாகனத் தலைநகரம்’** என்ற பெருமையையும் நாம் பெறவுள்ளோம்.*

*மோட்டார் வாகனம் மற்றும் உதிரிபாகங்கள், உணவுப் பொருட்கள், ஜவுளி, ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள், மின்னணுவியல், உலோகப் பொருட்கள், ரசாயனங்கள், ரப்பர் பொருட்கள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகின்றது. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் சுமார் 80 சதவிகிதப் பங்களிப்பு, மேற்கண்ட துறைகளில் இருந்தே வருகின்றன.*

*இத்தகைய துறைகளில் கவனம் செலுத்தும் 130 க்கும் மேற்பட்ட ‘ஃபார்ச்சூன்-500’ (அமெரிக்காவின் பிரபல வணிக இதழான ‘ஃபார்ச்சூன்’ ஆண்டுதோறும் வெளியிடும் பட்டியல்) நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றின் மூலம் முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, உற்பத்தித் துறையில் நமது முன்னணி நிலையை மேலும் வலுப்படுத்த, பல முதலீட்டாளர் மாநாடுகளை மாநிலம் முழுவதும் நடத்தி வருகிறது நம் அரசு.*

> தமிழ்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமையான ‘கைடன்ஸ்’ நிறுவனத்துக்கு, ‘ஆசியா ஓசியானியா மண்டலத்தின் சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்’ என்ற விருது 2022-ல் வழங்கப் பட்டுள்ளது.

*‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’ (சென்னை மற்றும் கோவை, ஜூலை மற்றும் நவம்பர் 2021), ‘ஏற்றுமதியில் ஏற்றம் முன்னணியில் தமிழ்நாடு’ (சென்னை, செப்டம்பர் 2021), ‘சர்வதேச அறைகலன் பூங்கா அடிக்கல் நாட்டு விழா’ (தூத்துக்குடி, மார்ச் 2022), ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், ஜப்பான் ஆகியவற்றுக்கு நம் முதல்வர் மேற்கொண்ட அரசு முறைப் பயணம் ஆகியவற்றின் காரணமாக, மே 2021 முதல் இதுநாள் வரை 4 லட்சத்து 14 ஆயிரத்து 836 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2 லட்சத்து 96 ஆயிரத்து 680 கோடி மதிப்பிலான 240 முதலீட்டு உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## அயல்நாடுகளில் தமிழ்நாடு முத்திரை

*தொழில் துறையில் அந்நிய நேரடி முதலீடுகள் தானாக நடந்துவிடாது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டுமானால், உள்ளூரில் முதலீட்டு மாநாடுகளை நடத்துவதோடு, வெளிநாடுகளில் நடக்கும் முதலீட்டு மாநாடுகள், தொழில்-கண்காட்சிகள் போன்றவற்றில் கலந்துகொண்டு தமிழ்நாட்டைப் பிரதிநிதிப்படுத்த வேண்டும். அங்கிருக்கும் முதலீட்டாளர்களுக்கு, தமிழ்நாட்டுக்கு வர அழைப்பு விடுக்க வேண்டும்.*

*இந்தப் பின்னணியில்தான் டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தில், 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கென்றே **‘மேம்பட்ட உற்பத்தி மையம்’** என்ற தலைப்பில் பிரத்யேகத் தளங்கள் வழங்கப்பட்டது போலவே, மே-2022 ஹானோவர் மெஸ்ஸில் நடைபெற்ற தொழில் வர்த்தகக் கண்காட்சி, தைவான் நாட்டில் நடைபெற்ற வட்டமேஜை சந்திப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு முத்திரை பதித்துள்ளது.*

*2024 ஜனவரி, சென்னையில் நடைபெறவிருக்கும் ‘உலக முதலீட்டாளர் மாநாடு’ பெரு வெற்றியடைய நம் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் நம் முதல்வர் அவர்கள் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.*

*இன்று உலக நாடுகள் தனித்து வளர்ந்துவிட முடியாது. பரஸ்பர நல்லுறவின் மூலமாகத்தான் வளர முடியும். இந்தியாவுடன் பல நாடுகளுக்கு நல்லுறவு உள்ளது. அதனை தமிழ்நாட்டு முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திட, நம் முதல்வரின் அயல்நாட்டுப் பயணங்கள் உதவும்!*

வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்வது பெரிதல்ல. அதில் உறுதி செய்யப்பட்டிருக்கிற முதலீடுகளைக் கொண்டு வருவதுதான் மிக முக்கியம். அதன் அடிப்படையில், கீழ்க்காணும் பட்டியலில் உள்ள திட்டங்களுக்கு நம் முதல்வர் அடிக்கல் நாட்டியிருக்கிறார்:

- **ரெனால்ட் நிஸ்ஸான் ஆட்டோமோட்டிவ் இந்தியா (2023, பிப்ரவரி 13), ஓரகடம்**
  முதலீடு : ரூ. **5,300** கோடி.
  வேலைவாய்ப்பு : **2,000**
- **ஓலா எலக்ட்ரிக் விரிவாக்கம் (2023 பிப்ரவரி 18), ஓசூர்**
  முதலீடு : ரூ. **7,874** கோடி.
  வேலைவாய்ப்பு : **3,316**
- **ஐனாக்ஸ் ஏர் புரொடக்ட்ஸ் (2023 பிப்ரவரி 18), ஓசூர்**
  முதலீடு : ரூ. **150** கோடி.
  வேலைவாய்ப்பு : **105**
- **பெள சென் கார்ப்பரேஷன் (2023 ஏப்ரல் 17), கள்ளக்குறிச்சி**
  முதலீடு : ரூ. **2,302** கோடி.
  வேலைவாய்ப்பு : **20,000**
- **மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா (2023 மே 9), திருவள்ளூர்**
  முதலீடு : ரூ. **1,891** கோடி.
  வேலைவாய்ப்பு : **2,000**

**...சாதனை தொடரும்**

## பெருமை பெற்ற ஆசிரியர்!



ந.அருணாசலம்

மக்களின் பங்கேற்புதான் மக்களாட்சியின் மகத்துவம். அதை அறிந்துதான் **‘நமக்கு நாமே’** என்கிற முன்னோக்குத் திட்டத்தினை 1997-ஆம் ஆண்டிலேயே கொண்டுவந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 2021-ஆம் ஆண்டிலிருந்து அதை மீளுருவாக்கம் செய்த நமது முதலமைச்சர், அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். சமுதாய நிதி உதவிகளுடன், அரசு பங்களிப்பு நிதி செலுத்தி, பல பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் இந்தத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் ஊராட்சிகள், தனிநபர்கள் பங்களிப்பு செய்து வரும் நிலையில், தான் பணியாற்றும் பள்ளிக்கு, தனது சொந்த சேமிப்பிலிருந்து பெரும் தொகையை அளித்துள்ளார் ஒரு தலைமையாசிரியர். மதுரை மாவட்டம் மேலூர் அருகே, உறங்கான்பட்டி அரசு மேனிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் ந.அருணாசலம், தான் பணியாற்றும் பள்ளியில் சுமார் 850 மாணவர்கள் பயிலும் நிலையில், புதிய வகுப்பறை கட்டுவதற்காகத் தனது சொந்த நிதியில் ரூபாய் பத்து லட்சத்தை அளித்துள்ளார். பொது நோக்கத்துக்கும், மாணவர்கள் நலன் கருதியும் இவரது பங்களிப்பு பேசுபொருளாக மாறி இருக்கிறது. பணியை நேசிப்பது மட்டுமல்ல, பள்ளியையும் நேசிக்கும் ஆசிரியராக உயர்ந்து நிற்கிறார்.

## :ப்ளாஷ்பேக்



### சிறு பங்களிப்பு!

1980-களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கழகப் பிரசார பீரங்கி இரா.வெற்றிகொண்டான் எழுதி நடித்த **‘பொழுது விடியும்’** என்ற நாடகம் நிகழ்த்தப்பட்டது. அதில் நானும் சிறு வேடத்தில் நடித்தேன். சேலம் மேட்டூர் பகுதியில், அன்றைய மாவட்டச் செயலாளர் வீரபாண்டியார் முன்னிலையில் இந்த நாடகம் நடைபெற்றது. நாடகம் முடிந்ததும், அதே ஒப்பனையுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். கழகப் பிரச்சாரத்தில் எனது இந்த சிறு பங்களிப்பு இப்போது நினைத்தாலும் பெருமிதம் தரும்.



சந்தானம்

**-சி.சந்தானம், அவைத்தலைவர், விக்கினராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### குலக்கல்வி எதிர்ப்பு

**1952 பொதுத்தேர்தலில், எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அப்போது சென்னை மாநிலத்தின் எல்லை, இன்றைய தமிழ்நாட்டின் அளவை விடப் பெரியது. ஆந்திரா, தமிழ்நாட்டுடன் இணைந்திருந்தது. தேர்தலில் இழுபறி நிலை ஏற்படவே, அரசியலில் சற்று ஒதுங்கி இருந்த ராஜாஜியை, முதலமைச்சராக்க ஒருமித்த கருத்து எழுந்தது. அவரது ஆட்சிக் காலத்தில்தான் தந்தையின் தொழிலை பிள்ளைகள் பழக வேண்டும் என குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். கழகம் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி அதை முடக்கியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 146




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131